©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 5.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 6] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 7, 2018
தை 25, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழில் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை நிலை எண் 183, தொழில் (MME. 1)த் துறை, 28 டிசம்பர் 2017.]*

1957ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (முறைப்படுத்தலும் மேம்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (1–A) ஆகிய உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு சிறு கனிமச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 8ஆம் விதியைச் சேர்ந்த, (6) துணை விதியில், (c) பகுதியில், (i) துணைப் பகுதியில் உள்ள "குத்தகைத் தொகையில் 10 விழுக்காடு அல்லது ஐந்தாயிரம் ரூபாய், இவையிரண்டில் எது அதிகமோ அத்தொகை செலுத்தத்தக்கதாகும்" என்ற தொடருக்குப் பதிலாக, "குத்தகைத் தொகையில் 20 விழுக்காடு அல்லது பத்தாயிரம் ரூபாய், இவையிரண்டில் எது அதிகமோ அத்தொகை செலுத்தத்தக்கதாகும்" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்;

(2) 8–Aஆம் விதியைச் சேர்ந்த, (9) துணை விதியில், (b) பகுதியில், "மாநில அரசால் அனுமதிக்கப்பட்ட ஏலத்தொகையில்/ ஒப்பந்தப்புள்ளித் தொகையில் பத்து விழுக்காடு அல்லது ரூ. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) இவையிரண்டில் எது அதிகமோ அத்தொகை பிணையமாக வைப்பீடு செய்யப்பட வேண்டும்" என்ற தொடருக்குப் பதிலாக, "மாநில அரசால் அனுமதிக்கப்பட்ட ஏலத்தொகையில்/ஒப்பந்தப்புள்ளி தொகையில் இருபது விழுக்காடு அல்லது ரூ. 40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) இவையிரண்டில் எது அதிகமோ அத்தொகை பிணையமாக வைப்பீடு செய்யப்பட வேண்டும்" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(3) 8–Aஆம் விதியைச் சேர்ந்த, (5) துணை விதியில், பகுதி (b)-ல், "20,000 ரூபாய்கான (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) கேட்பு வரைவோலை" என்ற தொடருக்குப் பதிலாக, "40,000 ரூபாய்க்கான (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) கேட்பு வரைவோலை" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(4) விதி 19–(A)ல்,–

(i) (4)ஆம் துணை விதியில், "ரூ.5000 (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அளவிலான தொகை" என்ற தொடருக்குப் பதிலாக, "ரூ10000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அளவிலான தொகை" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(ii) (14)ஆம் துணை விதியில், பகுதி (ii)ல் "ரூ.20000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) அளவிலான தொகை" என்ற தொடருக்குப் பதிலாக, "ரூ40000 (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) அளவிலான தொகை" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(5) விதி 22ல் இந்த வைப்பீட்டுத் தொகை "சாதாரணமாக 5000 ரூபாய்க்கு மேற்படக்கூடாது" என்ற தொடருக்குப் பதிலாக, இந்த வைப்பீட்டுத் தொகை சாதாரணமாக 10,000/– ரூபாய்க்கு (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மேற்படக்கூடாது" என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(6) பிற்சேர்க்கை IIக்கு பதிலாக, பின்வரும் பிற்சேர்க்கை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

**"பிற்சேர்க்கை**

**A. உரிமைக்கட்டண வீதம்**

| *தொடர் எண்* | *சிறு கனிமங்களின் பெயர்* | *கன மீட்டர் ஒன்றுக்கான உரிமைக் கட்டண வீதம் (ரூபாயில்)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | கருங்கல் நீங்கலாக கட்டடம் கட்டுவதற்கான மற்றும் சாலை அமைப்பதற்கான கற்கள் (a) கட்டுக்கல்/சக்கைக்கல் மற்றும் கற்பாறைகள் உட்பட கரடுமுரடான கற்கள் | 46.00 |
| | (b) சரளைப் பாகு, உடைகல், பாறாங்கல் மற்றும் கை உடைப்புக் கற்கள் உட்பட அளவில் சிறிதாக்கப்பட்ட பொருட்கள் (உடைத்தது அல்லது நொறுக்கப்பட்டது) | 59.00 |
| | (c) செவ்வண்ண இரும்பகக் களிமண் | 33.00 |
| | கருங்கல் | |
| 2 | (a) கருநிற கருங்கல் | 3,859.00 |
| | (b) அணிகலன் மற்றும் அலங்காரக் கற்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற சிவப்பு, இளஞ்சிவப்பு, சாம்பல் நிறம், பச்சை, வெள்ளை அல்லது பிற நிறமுடைய அல்லது பலவண்ண கருங்கற்கள் அல்லது ஏனைய பிற கற்கள் | 2,321.00 |
| 3 | சாதாரண மணல் | 120.00 |
| 4 | கரைகளை உயர்த்துவதற்கான அல்லது பள்ளத்தை நிரப்புவதற்காக மண் மற்றும் மண்கட்டி மற்றும் செங்கல், ஓடு தயாரிப்பு மற்றும் அலங்காரக் கற்கள் மற்றும் ஏனைய மட்பாண்டங்கள் தயாரிப்பதற்குப் பயன்படும் வண்டல்மண், செங்கல், மண் மற்றும் பீங்கான் களிமண் ஆகியவை உட்பட சாதாரண களிமண். | 26.00 |
| 5 | கட்டுமானப் பொருட்களாகப் பயன்படுத்துவதற்குத் தேவைப்படுகிற சுண்ணாம்பு தயாரிப்பிற்கு, சூளையில் பயன்படுத்தப்படும் சுண்ணாம்புக்கல், சுண்ணாம்புக் கிளிஞ்சல் மற்றும் கன்கர் (kankar) | 130.00 |
| 6 | வெண்ணிற மணிக்கல், படிகக்கல், சக்கிமுக்கிக்கல்லின் சிறு கற்கள் மற்றும் சிறு உருண்டைகள் | 195.00 |
| 7 | வீட்டுப் பயனுக்கான பொருட்கள் மற்றும் செதுக்குவதற்குப் பயன்படும் சவக்காரக்கல் மற்றும் ஏனைய கற்கள். | 52.00 |
| 8 | இங்கே குறிப்பிடப்படாத ஏனைய பிற சிறு கனிமங்கள் | 30% (சுரங்க வாயிலில் கனிமத்தின் உள்ளூர் சந்தை மதிப்பில் முப்பது விழுக்காடு) |

**B. பரப்பளவு மதிப்பீட்டிற்கான வீதம்**

| *தொடர் எண்* | *சிறு கனிமங்களின் பெயர்* | ஆண்டொன்றுக்கு எக்டர் ஒன்றுக்கான பரப்பளவு மதிப்பீட்டிற்கான வீதம் (ரூபாயில்) |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | "A. உரிமைக் கட்டணம்" என்ற தலைப்பின் கீழ் தொடர் எண்கள் 1 மற்றும் தொடர் எண் 3லிருந்து 7 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களுக்காக | 150.00 |
| 2 | "A. உரிமைக் கட்டணம்" என்ற தலைப்பின் கீழ் தொடர் எண் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களுக்காக | 300.00 |
| 3 | இங்கு குறிப்பிடப்படாத ஏனைய அனைத்து சிறு கனிமங்களுக்காக | 150.00 |

**C. பணி நடைபெறாதபோது செலுத்துகிற குத்தகை தொகை**

| *தொடர் எண்* | *சிறு கனிமங்களின் பெயர்* | *ஆண்டொன்றுக்கு எக்டர் ஒன்றுக்கு கனிமங்களை வெட்டியெடுக்கிற பணி நடைபெறாத போது செலுத்துகிற குத்தகைத் தொகை வீதம்* (ரூபாயில்) |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | “A. உரிமைக் கட்டணம்” என்ற தலைப்பின் கீழ் தொடர் எண் 2(a) ல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களுக்காக | 22,500.00 |
| 2 | “A. உரிமைக் கட்டணம்” என்ற தலைப்பின் கீழ் தொடர் எண்கள் 2(b) ல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களுக்காக | 15,000.00 |
| 3 | “A. உரிமைக் கட்டணம்” என்ற தலைப்பின் கீழ் தொடர் எண்கள் 1, 3 மற்றும் 5ல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களுக்காக | 3,000.00 |
| 4 | “A. உரிமைக் கட்டணம்” என்ற தலைப்பின் கீழ் தொடர் எண்கள் 4, 6 மற்றும் 7ல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களுக்காக | 1,500.00 |
| 5 | இங்கு குறிப்பிடப்படாத ஏனைய அனைத்து சிறு கனிமங்களுக்காக | 1,500.00 |

**D. கனிம வள ஆய்வுக்கான கட்டண வீதம்**

| *தொடர் எண்* | *கருங்கல்லின் பெயர்* | ஆண்டொன்றுக்கு/எக்டர் ஒன்றுக்கு கனிம வள ஆய்வுக்கான கட்டண வீதம் (ரூபாயில்) |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | எரிபாறை வகை | 13,000.00 |
| 2 | கருங்கல்லின் ஏனைய வகைகள் | 6,500.00” |

**அதுல்ய மிஸ்ரா**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ்வளர்ச்சி (ம) செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண். 138 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M.1)த் துறை, 8 ஆகஸ்ட் 2017.]*

2009 ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு சட்டத்தின் (மத்திய சட்டம் 1/2010) 53ஆம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 26–10–2016 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் III, பிரிவு – 1 (a) – இல், 65 மற்றும் 66 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறையின் SRO A–20/2016 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

## திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், அட்டவணை – XI–இல், தொடர் எண். 16–க்குப் பதிலாக பின்வருபவை அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 16. | விதி 23–இவ்விதிகளின் ஏதேனும் விதித்துறைகளை மீறுதல். | 53(3) | ரூ. 500 |

பி. அமுதா,
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

ந. அருள்,
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 152 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, 7 செப்டம்பர் 2017.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 87 ஆம் பிரிவு மற்றும் 112 ஆம் பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக் கருதியுள்ள பின்வரும் திருத்தம் ஒன்றின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கூறியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்து ஐந்து நாட்கள் முடிவடைந்த பின்னர், இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, எண். 47/1, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032இல் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வாயிலாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு இரு படிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன விதிகளில், 95ஆம் விதியின் கீழுள்ள 24 ஆம் விவர அட்டவணையில், 12–A ஆம் பத்திக்குப் பின்னர், பின்வரும் பத்தி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

12–B. சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவரால் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனை,– (1) பட்டாசுத் தொழிற்சாலைகளில், வேதிப்பொருட்களைக் கலத்தல், நிரப்புதல் மற்றும் கையாளுதல் செய் முறைகளில் பணியமர்த்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு பணியாளருக்கும், அவர் முதலில் பணியமர்த்தப்படும் நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவரால் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். அத்தகைய மருத்துவப் பரிசோதனையாவது, தோல் ஒவ்வாமைக்கான தோல் பரிசோதனை, நுரையீரல் செயல்பாட்டுச் சோதனை மற்றும் மார்பு ஊடுகதிர் சோதனை ஆகியவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும். சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவரால் அத்தகைய பணியில் பணியாற்றத் தகுதியானவர் எனச் சான்றளிக்கப்பட்டாலன்றி, எந்த ஒரு பணியாளரும் அவர் தொழிற்சாலையில் முதலில் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பின்னர் அத்தகைய பணியில் பணியாற்ற அனுமதிக்கப்படக்கூடாது.

(2) மேற்சொன்ன பணிகளில் பணியமர்த்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு பணியாளரும், குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை, சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவரால் மறுபரிசோதனை செய்யப்பட வேண்டும். சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர் சரியெனக் கருதும் இடங்களிலெல்லாம், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படும் மார்பு ஊடுகதிர் சோதனை நீங்கலாக துணை பத்தி (1)–ல் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்துப் பரிசோதனைகளையும் அத்தகைய மறுபரிசோதனையில் அடங்கியிருக்க வேண்டும்.

(3) சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர், பணியாளர் ஒருவரைப் பரிசோதனை செய்த பின்னர், படிவம் 27 இல் உடற்தகுதிச் சான்றிதழை வழங்க வேண்டும். மறுபரிசோதனை செய்ததற்கான பதிவுகள் சான்றிதழில் பதிவுசெய்யப்பட்டு, தொழிற்சாலை மேலாளரின் பொறுப்பில் அச்சான்றிதழ் வைக்கப்பட்டிருக்க வேண்டும். பரிசோதனைகளின் தன்மை மற்றும் முடிவுகள் உட்பட, துணைப் பத்திகள் (1) மற்றும் (2) இன் கீழ் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பரிசோதனையின் பதிவுகளும், படிவம் 17 இல் உடல்நலப் பதிவேடு ஒன்றில் சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவரால் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(4) உடற்தகுதிச் சான்றிதழும் உடல்நலப் பதிவேடும், ஆய்வாளரால் ஆய்வு செய்யப்படுவதற்குத் தயாராக வைத்திருக்கப்பட வேண்டும்.

(5) பணியாளர் ஒருவர் மேற்சொன்ன பணிகளில் தொடர்ந்தால் அவரின் உடல்நலனிற்கு மிகுந்த ஆபத்து ஏற்படும் என்னும் காரணத்தினால், அவர் பணியில் தொடர்வதற்குத் தகுதியற்றவர் என, யாதொரு காலத்திலும் சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர் கருதும் நேர்வில், அவரது பரிசோதனை முடிவுகள் குறித்த விவரங்களை, மேற்சொன்ன பணிகளில் பணியாற்றுவதற்கு மேற்சொன்ன நபர் தகுதியற்றவர் என அவர் கருதும் கால அளவையும் குறிப்பிட்டு, அந்த ஆவணங்களில் அவற்றைப் பதிவு செய்ய

வேண்டும். அவ்வாறு பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்படும் நபருக்கு, சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவரின் கருத்தின்படி, அவர் பணியாற்றுவதற்கு முழுத் திறமையுடையவர் எனக் கருதப்படாத நேர்வில், அவருக்கு மாற்றுப் பணி வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து, பாதிக்கப்பட்ட நபருக்கு, அவ்வாறு பொருத்தமான மறுவாழ்வு அமைத்துத்தரப்பட வேண்டும்.

(6) மேற்சொன்ன துணைப்பத்தி (5)இல் கூறப்பட்டுள்ளவாறாக பணிபுரிவதற்குத் தகுதியற்றவராகக் கண்டறியப்பட்டுள்ள யாதொரு நபரும், சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர் மேற்கொண்டும் பரிசோதித்த பின்னர், அத்தகைய செய்முறைகளில் பணியமர்த்துவதற்குத் தகுதிபெற்றிருப்பதாக அவருக்கு மீண்டும் சான்றளித்தாலன்றி மற்றபடி மேற்சொன்ன செய்முறைகளில் மீண்டும் பணியமர்த்தப்படக்கூடாது அல்லது பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.''

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.),*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 173 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 9 அக்டோபர் 2017.]*

1961 ஆம் ஆண்டு பேறுகால சலுகைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1961) 28 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு பேறுகால சலுகை விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் வரைவுத் திருத்தம் மேற்சொன்ன சட்டத்தின் 28 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் ஆணையர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில், 16 ஆம் விதியின் (1) துணை விதியின் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

''மேலும், பின்வருமாறு இருப்பின், வேலை அளிப்பவர் படிவம் K—இல் ஆண்டு கணக்கு விவர அறிக்கை அனுப்பப்படத் தேவையில்லை. அவையாவன

(அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் விதிகளின் 42—ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண். XIII—இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(ஆ) தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிலைமைகள்) விதிகளின் 35—ஆம் விதியின் (ii) ஆம் துணை விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண்XII – இல், ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(இ) தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு மலைத்தோட்ட விதிகளின் 83ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண். 28—இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(ஈ) தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகளின் 43—ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண் XIX—இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.),*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 174, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 9 அக்டோபர் 2017.]*

**1936** ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **4/1936**) **26** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு **1937** ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தங்களின் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் **26** ஆம் பிரிவைச் சேர்ந்த **(5)**ஆம் உட்பிரிவின் கீழ் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கக்கூடிய நபர்கள் அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதள்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை**–600 006–**இல் உள்ள தொழிலாளர் ஆணையர் வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை**–600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில், விதி **18–**ன் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர் பின்வருபவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

“மேலும்,

(அ) தமிழ்நாடு **1959** ஆம் ஆண்டு உணவக நிறுவனங்கள் விதிகளின் **42–**ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் XIII**–**இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுமாயின்; அல்லது

(ஆ) தமிழ்நாடு **1968** ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிலைமைகள்) விதிகளின் **35–**ஆம் விதியின் (ii) துணை விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் XII – இல், ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுமாயின்; அல்லது

(இ) தமிழ்நாடு **1955** ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் விதிகளின் **83**ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண். **28–**இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுமாயின்; அல்லது

(ஈ) தமிழ்நாடு **1965** ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் விதிகளின் **43–**ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண் XIX**–**இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுமாயின்,

“முதன்மை வேலை அளிப்பவர் படிவம் IV**–**இல் ஆண்டு கணக்கு விவர அறிக்கையை அனுப்பத் தேவையில்லை”.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.),*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 175 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 9 அக்டோபர் 2017.]*

**1970**ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **37/1970**) **35** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு **1975** ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தங்களின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **35** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** ஆம் உட்பிரிவின் கீழ் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கக்கூடிய நபர்கள் அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை**–600 006–**இல் உள்ள தொழிலாளர் ஆணையர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ச் கோட்டை, சென்னை**–600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில், விதி **82–**ன் **(2)** துணை விதியின் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வருபவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

மேலும்,

(அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவக நிறுவனங்கள் விதிகளின் 42—ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் XIII—இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுமாயின், அல்லது

(ஆ) தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிலைமைகள்) விதிகளின் 35—ஆம் விதியின் (ii) துணை விதியில் கோரியுள்ளவாறாக படிவம் XII-ல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுமாயின், அல்லது

(இ) தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் விதிகளின் 83ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண். 28—இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுமாயின்; அல்லது

(ஈ) தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகளின் 43—ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண் XIX-இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுமாயின்,

“முதன்மை வேலை அளிப்பவர் படிவம் XXV-இல் ஆண்டு கணக்கு விவர அறிக்கையை அனுப்பத் தேவையில்லை”.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.),*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 194 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 13 நவம்பர் 2017.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 30ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1953 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளில் செய்யக்கருதியுள்ள கீழ்க்காணும் வரைவு திருத்தம், மேற்சொன்ன சட்டத்தின் 30 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை, சென்னை—600 006இல் உள்ள தொழிலாளர் ஆணையாளர் வாயிலாக, தமிழ்நாடு அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (J1) துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 21 ஆம் விதியில் (4) ஆம் துணைவிதியின் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், கீழ்க்காணும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்,—

“ஆனால், பின்வருமாறு இருப்பின், வேலையளிப்பவரால் படிவம் III—இல் ஆண்டு கணக்கு விவர அறிக்கை அனுப்பப்படத் தேவையில்லை, அவையாவன

(அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் விதிகளின் 42—ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண் XIII-இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(ஆ) தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிலைமைகள்) விதிகளின் 35—ஆம் விதியின் (ii)ஆம் துணை விதியில் கோரியுள்ளவாறாக படிவம் எண் XII-இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(இ) தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு மலைத்தோட்ட விதிகளின் 83ஆம் விதியைச் சேர்ந்த (1) துணைவிதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண். 27—இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(ஈ) தமிழ்நாடு 1965 – ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் விதிகளின் 43–ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண் XIX-இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது.''

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்,*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 199 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 22 நவம்பர் 2017.]*

1966ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு நிலைமைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 32/1996), 44ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு நிலைமைகள்) விதிகளில் செய்யக் கருதியுள்ள திருத்தங்களுக்கான பின்வரும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 44ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 26 ஆம் விதியின் (2) ஆம் துணை விதி விட்டுவிடப்பட வேண்டும்;

(2) 28 ஆம் விதி விட்டுவிடப்பட வேண்டும்

(3) 36 ஆம் விதியில்,–

(a) (1) ஆம் துணைவிதிக்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:–

''(1) ஒவ்வொரு வேலையளிப்பவரும், தொழிற்சாலை வளாகத்திற்குள் பணியமர்த்தப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் மற்றும் வீட்டுப் பணியாளர்கள் குறித்த ஒருங்கிணைந்த வேலைவாய்ப்புப்பதிவேடு ஒன்றை படிவ எண் XIII–இல், வைத்து வர வேண்டும்; ஒருங்கிணைந்த வேலைவாய்ப்புப்பதிவேடு நியாயமான கால அளவில் ஆய்வின்போது வைத்திருக்கப்பட வேண்டும்''.

(b) துணை விதி 2A இன் பகுதி (ii) மற்றும் துணை விதிகள் (3) மற்றும் (5) விட்டு விடப்பட வேண்டும்;

(4) 36 ஆம் விதியின், 1 துணைவிதியின் கீழ் வரையறுக்கப்பட்ட ''படிவம் எண் XIII'' விட்டு விடப்பட வேண்டும்:–

(5) ''படிவம் எண் XIII''-க்குப் பதிலாக, பின்வரும் படிவம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

### படிவம் எண். XIII

### ஒருங்கிணைந்த வேலைவாய்ப்புப் பதிவேடு

**[36 ஆம் விதியின் (1) துணை விதியைக் காண்க.]**

பீடி தொழிற்சாலை வளாகங்களின் பெயர்
மற்றும் முகவரி:

வேலையளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின்/பொறுப்பிலுள்ளவரின் பெயர்:

| | | |
|---|---|---|
| மாதம்: | ஆண்டு: | ஊதியக் காலம்: |
| பீடி நிறுவனத்தின் உரிம எண் | படிவம்-III நடவடிக்கை குறிப்பேடு எண் மற்றும் நாள்: | மிகைநேர ஊதியம்: |

பணியமர்த்தப்பட வேண்டிய தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை:

அங்கீகரிக்கப்பட்ட பண்டிகைக்கால விடுமுறைகள்:

1.

2.

3.

4.

5.

உரிமத்தின் செல்திறன்

**தொழிலாளர்களின் எண்ணிக்கை**

| தொழிற்சாலை வளாகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை | உரிய வயதை அடைந்தவர் | இளம் பருவத்தினர் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆண்கள் | | | |
| பெண்கள் | | | |

வீட்டுப்பணியாளர்களின் எண்ணிக்கை:

ஆண்கள்:

பெண்கள்:.

| தொடர் எண் | தொழிலாளரின் பெயர் | தொழிலாளர் அடையாள அட்டை எண் | பணியில் சேர்ந்த நாள் | உரிய வயதை அடைந்தவர்/இளம் பருவத்தினர் | பதவிப் பெயர் | தொழிற்சாலைப் பணியாளர்/ புறப்பணியாளர்/வீட்டுப் பணியாளர் | புறப்பணியாளரின் பணியிடம் | வீட்டுப் பணியாளரின் முகவரி | மாதத் தொடக்கத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு | வரவு வைக்கப்பட வேண்டிய ஊதியத்துடன் கூடிய விடுப்புகளின் எண்ணிக்கை (20 நாட்களுக்கு 1 நாள்) | ஊதியத்துடன் கூடிய விடுப்பு நாட்களின் மொத்த எண்ணிக்கை (நெடும்பத்தி 7+8) | மாதத்தில் துய்க்கப்பட்ட ஈட்டிய விடுப்பு | மாத இறுதியில் ஈட்டிய விடுப்பின் எண்ணிக்கை | பணி தொடங்கும் நேரம் | ஓய்வு இடைவேளை | பணி நிறைவுறும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |

<table>
<tr><td colspan="10">மிகைப்பணி (ஏதேனுமிருப்பின்) உட்பட தினசரி பணி நேரம்</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="10">(18)</td></tr>
</table>

பயன்படுத்தப்பட வேண்டிய சுருக்கக் குறியீடுகள்:

H-வாராந்திர விடுமுறை

NH-தேசிய விடுமுறை

ML-மருத்துவ விடுப்பு

MBL-மகப்பேறு விடுப்பு

SP-பணியிடை நீக்கம்

FH-பண்டிகைக்கால விடுமுறை

EL-ஈட்டிய விடுப்பு

HW-ஊதியத்துடன் கூடிய விடுமுறை

SH-பதிலி விடுமுறை

LOP-ஊதியமில்லா விடுப்பு

| எண் | விவரம் |
|---|---|
| 19 | பணி புரிந்த மொத்த நாட்கள் |
| 20 | பணி புரிந்த மொத்த நேரம் |
| 21 | மொத்த மிகைப் பணி நேரம் |
| 22 | மகப்பேறு விடுப்பு |
| 23 | பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் 9 அல்லது 10 ஆம் பிரிவின் கீழ் ஊதியத்துடனான விடுப்பு |
| 24 | ஊதியமில்லா விடுப்பு நாட்களின் எண்ணிக்கை |
| 25 | தேசிய விடுமுறை (*) நாட்களில் பணிபுரிந்ததற்காகக் கிடைக்கப்பெற்ற பயன் |
| 26 | பண்டிகைக் கால விடுமுறை (*) நாட்களில் பணிபுரிந்ததற்காகக் கிடைக்கப்பெற்ற பயன் |
| 27 | பணியிடை நீக்கம் ஏதும் செய்யப்பட்டிருப்பின் அதன் காலம் அளவு |
| 28 | 480 பணி நாட்களை நிறைவு செய்த நாள் |
| 29 | பணிநிரந்தரம் செய்யப்பட்ட நாள் |
| 30 | அடிப்படை ஊதியம் |
| 31 | அகவிலைப்படி |
| 32 | ஏனையப் படிகள் (தன்மை குறிப்பிடவும்) |
| 33 | மிகைநேரப் பணி ஊதியங்கள் |
| 34 | விடுப்பு ஊதியங்கள் |
| 35 | மொத்த ஊதியங்கள் |

(*) பயன்படுத்தப்பட வேண்டிய சுருக்கக் குறியீடுகள்:

H -அனுமதிக்கப்பட்ட விடுமுறைகள்

W/D-இரட்டை ஊதியத்துடனான பணி

W/H-பதிலி விடுமுறையில் செய்த பணி

N/E-ஊதியத்திற்குத் தகுதியில்லை எனில்

| எண் | பிடித்தங்கள் | விவரம் |
|---|---|---|
| 36 | | வருங்கால வைப்பு நிதி |
| 37 | | மாநிலத் தொழிலாளர் ஈட்டுறுதி |
| 38 | | குடும்ப ஓய்வூதியத் திட்டம் |
| 39 | | ஊதியமில்லாதது |
| 40 | முன்பணம் | வழங்கப்பட்ட முன்பணம் |
| 41 | முன்பணம் | மாதத் தொடக்கத்தில் நிலுவையிலுள்ள முன்பண வசூல் |
| 42 | முன்பணம் | வசூலிக்கப்பட்ட முன்பணம் |
| 43 | முன்பணம் | வசூல் நிலுவை |
| 44 | சேதங்கள் | சேதங்கள் அல்லது இழப்பிற்கு விதிக்கப்பட்ட பிடித்தங்கள் |
| 45 | சேதங்கள் | மாதத் தொடக்கத்தில் நிலுவையிலுள்ள பிடித்தங்கள் தொடர்பான வசூல் |
| 46 | சேதங்கள் | சேதங்கள் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் |
| 47 | சேதங்கள் | வசூல் நிலுவை |
| 48 | அபராதங்கள் | விதிக்கப்பட்ட அபராதங்கள் |
| 49 | அபராதங்கள் | மாதத் தொடக்கத்தில் நிலுவையிலுள்ள அபராதங்கள் குறித்த வசூல் |
| 50 | அபராதங்கள் | அபராதங்கள் மீதான பிடித்தம் |
| 51 | அபராதங்கள் | வசூல் நிலுவை |
| 52 | | நிலையாணைகளின் கீழ் செய்யப்படும் பிடித்தங்கள் |
| 53 | | ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் கீழ் பிடித்தங்கள் |
| 54 | | நிகர ஊதியங்கள் |
| 55 | | பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவிலுள்ளவாறு மருத்துவ மிகை ஊதியம் |
| 56 | | வழங்கப்படாத சேர்ந்து வந்த தொகைகள் |
| 57 | | கணக்கிடப்பட்ட பிழைப்பூதியப் படியின் வீதம் |
| 58 | | வழங்கப்பட்ட பிழைப்பூதியப் படி |
| 59 | | தேதியுடன் கூடிய கையொப்பம் அல்லது கைபெருவிரல் ரேகை பதிவு / வங்கி மூலமாக தொகை செலுத்தப்பட்டிருப்பின் காசோலை எண் மற்றும் நாள்/ வங்கியின் அறிவிப்புச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். |

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 200 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K2)த் துறை, 22 நவம்பர் 2017.]*

**1951**ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **69/1951**) **43** ஆம் பிரிவைச் சேர்ந்த (**1**) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு **1955** ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் விதிகளில் வெளியிடக் கருதிய பின்வரும் திருத்தங்களின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **43** ஆம் பிரிவைச் சேர்ந்த (**1**) உட்பிரிவின் வரம்பு நிபந்தனையில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(**2**) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து ஆறு வாரங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் மற்றும் கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை, சென்னை—**600 006**—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—**600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,—

(1) 78ஆம் விதி விட்டுவிடப்பட வேண்டும்;

(2) 82 ஆம் விதியில்,—

(a) (1) துணைவிதியில், (a) மற்றும் (b) பகுதிகள் விட்டுவிடப்பட வேண்டும்;

(b) பகுதி (c) இல், ‘‘படிவம் எண். 14-A இல், மலைத்தோட்டத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்துப் பணியாளர்களின் வருகைப் பட்டியல்; மற்றும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘படிவம் எண். 14-A இல், மலைத்தோட்டத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்துப் பணியாளர்களின் ஒருங்கிணைந்த பணிப் பதிவேடு; மற்றும்’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

பகுதி (c) இல் வரையறுக்கப்பட்டுள்ள படிவம் எண். 14-A விட்டுவிடப்பட வேண்டும்;

14-A படிவத்திற்குப் பதிலாக, பின்வரும் படிவம் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

### படிவம் எண். 14A

### ஒருங்கிணைந்த பணிப் பதிவேடு

**[82(1)(c) ஆம் விதியைக் காண்க.]**

மலைத் தோட்டத்தின் பெயர்
மற்றும் முகவரி:

வேலையளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி:

மேலாளரின்/பொறுப்பிலுள்ளவரின் பெயர்:

| | | |
|---|---|---|
| மாதம்: | ஆண்டு: | ஊதியக் கால அளவு: |
| பதிவுச் சான்றிதழ் எண் மற்றும் நாள்: | படிவம்-III நடவடிக்கை குறிப்பேடு எண் | மிகைநேர ஊதியம்: |
| பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்களின் உயரளவு எண்ணிக்கை: | அங்கீகரிக்கப்பட்ட பண்டிகைக்கால விடுமுறைகள்:<br>1.<br>2.<br>3.<br>4.<br>5. | |

உரிமத்தின் செல்திறன் கால அளவு :

மலைத்தோட்டத்தின் பரப்பளவு (ஹெக்டேர்)

**பணியாளர்களின் எண்ணிக்கை**

| மலைத்தோட்டங்களில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | உரிய வயதை அடைந்தோர் | வளரிளம் பருவத்தினர் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆண்கள் | | | |
| பெண்கள் | | | |

| தொடர் எண் | பணியாளரின் பெயர் | பாலினம் | பிறந்த நாள்/வயது | தந்தை/கணவர் பெயர் | பணியாளர் அடையாள அட்டை எண் | பணியின் தன்மை | பணியில் சேர்ந்த நாள் | உரிய வயதை அடைந்தோர்/வளரிளம் பருவத்தினர் | பதவியின் பெயர் | மாதத்தின் தொடக்கத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு | வரவு வைக்கப்பட வேண்டிய ஊதியத்துடன் கூடிய விடுப்புகளின் எண்ணிக்கை (20 நாட்களுக்கு 1 நாள்) | ஊதியத்துடன் கூடிய விடுப்பு நாட்களின் மொத்த எண்ணிக்கை (நெ.ப. 7+8) | அந்த மாதத்தில் துய்க்கப்பட்ட ஈட்டிய விடுப்பு | மாத இறுதியில் எஞ்சியுள்ள ஈட்டிய விடுப்பின் எண்ணிக்கை | பணி தொடங்கும் நேரம் | ஓய்வு இடைவேளை | பணி நிறைவுறும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |

| மிகைப்பணி (ஏதேனுமிருப்பின்) உட்பட தினசரி பணி நேரம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 31 |
| 19 | | | | | | | | | |

பயன்படுத்தப்பட வேண்டிய சுருக்கக் குறியீடுகள்:

H-வாராந்திர விடுமுறை

FH-பண்டிகைக்கால விடுமுறை

NH-தேசிய விடுமுறை

EL-ஈட்டிய விடுப்பு

ML-மருத்துவ விடுப்பு

HW-ஊதியத்துடன் கூடிய விடுமுறை

MBL-மகப்பேறு விடுப்பு

SH-பதிலி விடுமுறை

SP-பணியிடை நீக்கம்

LOP-ஊதியமில்லா விடுப்பு

| | |
|---|---|
| 20 | மொத்த பணி நாட்கள் |
| 21 | மொத்த பணி நேரம் |
| 22 | மொத்த மிகைப் பணி நேரம் |
| 23 | பேறுகால விடுப்பு |
| 24 | பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் **9** அல்லது **10** ஆம் பிரிவின் கீழ் ஊதியத்துடனான விடுப்பு |
| 25 | ஊதியமில்லா விடுப்பு நாட்களின் எண்ணிக்கை |
| 26 | தேசிய விடுமுறை **(*)** நாட்களில் பணிபுரிந்ததற்காகக் கிடைக்கப்பெற்ற பயன் |
| 27 | பண்டிகைக் கால விடுமுறை **(*)** நாட்களில் பணிபுரிந்ததற்காகக் கிடைக்கப்பெற்ற பயன் |
| 28 | பணியிடை நீக்கம் ஏதும் செய்யப்பட்டிருப்பின் அதன் காலம் அளவு |
| 29 | பணியில் **480** நாட்கள் நிறைவு செய்த நாள் |
| 30 | பணிநிரந்தரம் செய்யப்பட்ட நாள் |
| 31 | அடிப்படை ஊதியம் |
| 32 | அகவிலைப்படி |
| 33 | ஏனைய படிகள் (விவரம் குறிப்பிடவும்) |
| 34 | மிகைநேரப் பணி ஊதியம் |
| 35 | விடுப்பு ஊதியம் |
| 36 | மொத்த ஊதியம் |

**(*)** பயன்படுத்தப்பட வேண்டிய சுருக்கக் குறியீடுகள்:

H –அனுமதிக்கப்பட்ட விடுமுறைகள்

W/H–பதிலி விடுமுறையில் செய்த பணி

W/D–இரட்டை ஊதியத்துடனான பணி

N/E–ஊதியத்திற்குத் தகுதியற்றது எனில்

பிடித்தங்கள்

முன்பணம் சேதங்கள் தண்டம்

| | |
|---|---|
| 37 | வருங்கால வைப்பு நிதி |
| 38 | மாநிலத் தொழிலாளர் ஈட்டுறுதி |
| 39 | ஊதியமில்லா விடுப்பு |
| 40 | வழங்கப்பட்ட முன்பணம் |
| 41 | மாதத் தொடக்கத்தில் நிலுவையிலுள்ள பிடித்தம் செய்யவேண்டிய முன்பணம் |
| 42 | வசூலிக்கப்பட்ட முன்பணம் |
| 43 | வசூல் நிலுவை |
| 44 | சேதங்கள் அல்லது இழப்பிற்கு விதிக்கப்பட்ட பிடித்தங்கள் |
| 45 | மாதத் தொடக்கத்தில் பிடித்தங்கள் தொடர்பான வசூல் |
| 46 | சேதங்கள் அல்லது இழப்பிற்கான பிடித்தங்கள் |
| 47 | வசூல் நிலுவை |
| 48 | விதிக்கப்பட்ட அபராதங்கள் |
| 49 | மாதத் தொடக்கத்தில் நிலுவையிலுள்ள அபராதங்கள் குறித்த வசூல் |
| 50 | அபராதங்கள் மீதான பிடித்தம் |
| 51 | வசூல் நிலுவை |
| 52 | நிலையாணைகளின் கீழ் செய்யப்படும் பிடித்தங்கள் |
| 53 | ஊதியங்கள் வழங்கள் சட்டத்தின் கீழ் பிடித்தங்கள் |

| | |
|---|---|
| 54 | நிகர ஊதியங்கள் |
| 55 | பேறுகாலச் சலுகைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவிலுள்ளவாறு மருத்துவ மிகை ஊதியம் |
| 56 | 32 ஆம் பிரிவின்படி நோய்நிலைப்படி |
| 57 | வழங்கப்படாத சேர்ந்து வந்த தொகைகள் |
| 58 | கணக்கிடப்பட்ட பிழைப்பூதியப் படியின் வீதம் |
| 59 | வழங்கப்பட்ட பிழைப்பூதியப் படி |
| 60 | விபத்து ஏற்பட்ட நாள் /விவரங்கள் (ஏதேனுமிருப்பின்) |
| 61 | தேதியுடன் கூடிய கையொப்பம் அல்லது கைபெறுவிரல் ரேகை பதிவு / வங்கி மூலமாக தொகை செலுத்தப்பட்டிருப்பின் காசோலை எண் மற்றும் நாள்/வங்கியின் ஒறிவிப்புச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். |

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.